# இது எனக்கு ரீ-எண்ட்ரி

இசையமைப்பாளர் வித்யாசாகர்

இசையமைப்பாளர் வித்யாசாகர் முன்பொரு முறை பரபரப்பான மியூசிக் டைரக்டரா பேசப்பட்டவர். இடையில் இவரைப்பற்றிய எந்த தகவலும் இல்லாமல் இருந்தது. இப்போது "தில்", "பூவெல்லாம் உன்வாசம்", "அள்ளித்தந்த வானம்", "வேதம்" போன்ற படங்கள் மறுபடியும் வித்யாசாகரை பிஸியான இசையமைப்பாளராக்கி உள்ளது.

**இவ்வளவு நாளும் எங்கே போயிருந்தீங்க வித்யாசாகர்... ?**




தமிழில் கொஞ்ச வருடங்களுக்கு முன்பு என்னோட இசைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அதுக்கு அஸ்திவாரம் அமைச்சுக்கொடுத்தது. நடிகர் அர்ஜூனுடைய "ஜெய்ஹிந்த்" படம். அதைத்தொடர்ந்து "கர்ணா", "பசும்பொன்", "ப்ரியம்", "வில்லாதிவில்லன்", "நிலாவே வா"ன்னு நிறைய படங்களுக்கு சூப்பர் ஹிட் பாடல்களை கொடுத்தேன்.

இத்தனை படங்களுக்கு ஹிட் பாடல்களை கொடுத்தும் கூட தொடர்ந்து எனக்கு படங்கள் வராமப்போனது தான் துரதிஷ்டம். ஆகவே கொஞ்சம் ரூட்டை மாத்திப்பாக்கலாமேன்னு மலையாளப்பட உலகம் பக்கமா போயிட்டேன். அங்கே நான் போட்ட எல்லா டியூன்களுமே ஹிட்டாச்சு. அதனால நான் மலையாளப்பட உலகத்துல பிஸியான மியூசிக் டைரக்டராகிட்டேன். இதுவரை முப்பதுக்கும் மேற்பட்ட படங்களுக்கு அங்கே இசையமைச்சிருக்கேன். என்னோட மியூசிக்காக மூன்று முறை கேரள அரசின் விருதும் இரணஅடு முறை பிலிம் ஃபேர் விருதும் கிடைச்சிருக்கு

**அப்படியிருக்கும் போது திரும்பவும் தமிழுக்கு வர என்ன அவசியம் ஏற்பட்டது ?**

என்ன தான் நாம வேறு மொழியில முடிசூடா மன்னனா இருந்தாலும் எனக்கு ஒரு நல்ல அங்கீகாரத்தை கொடுத்த தமிழ் ஃபீல்டை மறக்க முடியுமா ? தமிழ் என்னோட தாய் வீடு மாதிரி. கொஞ்ச காலம் தனிக்குடித்தனம் செய்து பாத்தேன். திரும்பவும் தாய்வீட்டுக்கே வந்துவிட்டேன்.

இது இரண்டாவது இன்னிங்ஸ். இந்த முறையாவது இடத்தை தக்க வெச்சுக்குவீங்களா ?

சினிமாவப்பொருத்தவரை வெற்றி-தோல்வி மாறி மாறித்தான் வரும். யார் ஒருத்தருமே தொடர்ந்து ஜெயிச்சுக்கிட்டே இருக்க முடியாது. அதே போல நிரந்தரமோ தோல்வியை சந்திக்கவும் முடியாது. ஜெயிச்சவன் தோற்பதும், தோல்வி கண்டவன் ஜெயிக்கறதும் இங்கே சகஜம்.

என்னைப்பொருத்தவரை வெற்றியோ-தோல்வியோ எது நேர்ந்தாலும் உற்சாகம் குறையாமல் என்னோட வேலையை முழு ஈடுபாட்டுடன் செய்வேன். அந்த இன்வால்வ் மெண்டும், தொழில் மேல நான் கொண்டிருக்குகம் நேசமும் நான் திரும்பவும் எனக்கு தமிழில் ரீ-எண்ட்ரியை ஏற்படுத்தி கொடுத்திருக்கு. “தில்” “பூவெல்லாம் உன்வாசம்”, “வேதம்”, “அள்ளித்தந்த வானம்” படங்களின் வெற்றியும் அதில் இடம் பெற்ற என் மெட்டுக்களோட வெற்றியும் தமிழில் திரும்பவும் என்னை பிஸியாக்கியிருக்குது. இப்போ நிறைய படங்களுக்கு மியூசிக் பண்றேன். இந்த ரீ-எண்ட்ரியை தக்க வெச்சுக்க கடுமையை உழைக்கிறேன். அதுக்கும் மேல நடக்கறது ஆண்டவனுடைய செயல்.

வைரமுத்து எழுதி வெளிவந்த கவிதை தொகுப்பில் உள்ல சில கவிதைகளையே “பூவெல்லாம் உன் வாசம்” படத்தின் பாடலாக்க வேண்டிய அவசியம் என்ன ?

கதை, காட்சியமைப்பு, இசை, மெட்டு இவைகளுக்கு கட்டுப்பட்டு எழுதறதை விட ஒரு கவிஞன் எந்த நிர்பந்தங்களுக்கும் சிறைப்பட்டு விடாம சுதந்திரமா எழுதிய கவிதைகள்ல கருத்துக்கள் நிறைய புதைந்து கிடக்கும் அந்த வகையில் பார்த்தா வைரமுத்து சார் ஒரு கருத்துச்சுரங்கம். அவருடைய ஒவ்வொரு கவிதை தொகுப்பையும் இசை மெட்டுக்களாமாத்த வேணும்ங்கறது என்னோட தனிப்பட்ட விருப்பம். பெயரளவில் பார்த்தால் அது கவிதைகளாத்தான் தெரியும். அந்த கவிதைகளுக்குள் ஊடுருவிப்பாத்தால் அதற்குள் ஓர் இசைலயம், ஸ்வரம்... இழையோடியிருப்பதை அதை மெட்டுக்களா மாற்றும் போது நான் உணர்ந்தேன். என்னோட இசை மெட்டுக்காக கவிஞர் எழுதும் பாடல் வரிகளைப்போலவே அந்த கவிதைகளும் வெற்றிகரமான மெட்டுக்களா வெளிவந்தது.

இப்ப நிறைய இளம் பாடலாசிரியர்கள் உற்பத்தியாகியிருக்காங்க. அந்த இளம் கவிஞர்களை கௌரவப்படுத்தும் ஐடியா இருக்கா... ?

பொதுவா எனக்கும் வைரமுத்து சாருக்கும் சிந்தனைகள் ஒரே அலை வரிசையியில் இருக்கு. நான் என்ன எதிர்பார்க்கிறேனோ அதை அவர் தந்திடறார். அவர் கருத்தும்-கற்பனையும் என்னோட மெட்டை மீறுவது கிடைதாது. நெக்கும் அவருக்கும் அப்படியொரு சக்ஸஸ்ஃபுல் காம்பினேஷன் அமைஞ்சு போச்சு.

ஆனாலும், நான் எந்த பாரபட்சமும் பாக்காம நிறைய இளம் கவிஞர்களுக்கும் வாய்ப்பு வழங்கிட்டுதான் இருக்கேன். “தில்”, “அள்ளித்தந்த வானம்”, “வேதம்” படங்களில் வைரமுத்து அல்லாத பிற கவிஞர்களையும் பயன்படுத்தியிருக்கேன்.

இப்போ வந்திருக்கும் இளம் கவிஞர்கள் ரொம்ப நல்லா எழுதறாங்க. அனுபவசாலிகளைப்போல புதுசுபுதுசா வார்த்தைகளை வாரி வழங்கறாங்க. நல்ல கற்பனை வளமும், தெளிந்த தமிழும் அவங்க கிட்டேயிருப்பதை நான் கவனிக்க தவறலே.

**உங்களின் இசை குரு யார் ?**

என்னோட இசைத்திறமை வெளியே தெரிய காரணம், நானொரு இசையமைப்பாளனா அடையாளம் காட்டப்பட்டிருக்கேன்னா அதுக்கு காரணம் இசைஞானி இளையராஜா சார் தான். அவருடன் இசைக்குழுவில் பதிமூன்று வருடம் இருந்திருக்கேன். இசை நுணுக்கங்களை நான் அவர்கிட்டயிருந்து தான் கத்துக்கிட்டேன். இளையராஜா சார் கூட இசைப்பணியில் நான் ஈடுபட்டிருந்த அந்த நாட்கள் எப்பவுமே பசுமையானவை.

ஆனா, என்னோட மானசீக குரு எம்.எஸ்.விஸ்வநாதன் சார் தான். அவருடைய ஏராளமான ஏகலைவன்களில் நானும் ஒருவன். எனக்கு இசைமேல் ஈடுபாடு ஏற்பட காரணமாயிருந்தது எம்.எஸ்.விஸ்வநாதன் சாரோட இசை மெட்டுக்கள் தான். எம்.எஸ்.வி., இளையராஜா இருவருமே தமிழ் திரையுலகத்துக்கு ஒரு பொக்கிஷம் போல இருந்தவங்க. இந்த இசை ஜாம்பவான்களோட சாதனைகள்ல கால்வாசியாவது நான் சாதிச்சேன்னா அதுவே என் வாழ்நாள்ல நான் செய்த பெரும் பாக்யமா நினைப்பேன்.